

# ஓவியம்

சி. ஏ. எலியாசன்

மலையக
வெளியீட்டகம்

# ஓவியம்
## (குறுங்காவியம்)

சி. ஏ. எலியாசன்

மலையக
வெளியீட்டகம்
கண்டி

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# ஓவியம்

மலையக வெளியீட்டகம்

வெளியீடு 7

முதற் பதிப்பு ஆகஸ்ட் 1988

உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூபாய் 10/-

*Subject:* **POEM**

*Author:* **C. A. ELIASAN**

*Cover Design:* **P. ATPUTHARAJ**

*Publishers:* **Hill Country Publishing House
57, Mahinda Place,
Colombo-6.**

*Printers:* **Navalanka Press, Ragala, Halgranoya**

*Price:* **Rs. 10/-**

*First Edition:* **August 1988**

-அவர்

விம்மி விம்மி விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே! - துன்பக்
கேணியில் எங்கள் பெண்களழுத சொல்
மீட்டும் உரையாயோ?

-மகாகவி பாரதியார்



க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# வாழ்த்துரை . . .

பாவலன் எலியாசன் பாகிலே வடித்தஎழில்
ஓவியம் கண்டேன்; உவகை மிகக்கொண்டேன்;
காவியம் சமைத்தகவி காளி தாசன்போல்; குறுங்
காவியம் அமைத்தநம் கவிஞனைப் போற்றுகின்றேன்.

வேட்டுவன் ஏகலைவன் விரும்பியே பூஜித்த
பாட்டிலே பாவலனார் பக்தி நெறியுடையார்
புரட்சிக் கவிதந்த பாரதி தாசனும்
காதற் கதையீந்த கண்ண தாசனும்
பாரதி சுரதா பாவலன் கம்பதாசன்
கவிஞனின் உள்ளக் கமலத்தே வீற்றிருக்க
நாளொன்றில் வடித்த நறுந்தேன் கவிதைகளை
தாளேட்டில் பொறித்த தன்மையைப் போற்றுகிறேன்

பருவ மங்கையின் பதினாறு பராயத்தின்
உருவ அமைப்பினை ஓவிய மாக்கிட
பதினாறு பக்கங்கள் படைத்த கவிதைகள்
அளவில் சிறிதுதான்; ஆயினும் அழகுண்டு
காவியம் கடைசியில் ஓவிய மாவதும்
காண்போர் இதயத்துள் கண்ணீர்த் துளியாகும்
ஓவியம் வரைந்திட்ட பாவலன் எலியாசன்
காவியம் பலஎழுத கடவுள் அருளட்டும்!

— தேவதாசன் ஜெயசிங்
(அதிபர்)
குண்டசாலை தமிழ் வித்தியாலயம்
கண்டி.

27-09-1988.

# பதிப்புரை

நினைவுகள் . . .

அந்த நினைவுகள் மீண்டும் இரை மீட்டி பார்க்கையில் ஓர் இனிய அனுபவம். பூண்டுலோயாவில் "சி. வி. சில சிந்தனைகள்" நூல் அறிமுக விழா:

அங்கு அறிமுகமானவர் நண்பர் சி. ஏ எலியாசன். அவருடைய கவிதைகளை பத்திரிகையில் படித்து சுவைத்துள்ளேன்..

அவரைப்போலவே எவ்வித சலசலப்புமின்றி அவரது எழுத்துக்கள் அமைதியான நீரோட்டம்

மீண்டும்... நண்பர் சாரல் நாடன் இல்லத்தில் சந்திப்பு

"ஓவியம்" குறுங்காவியத்தை அச்சில் கொண்டுவர வேண்டும் என்கிற ஆர்வம் அவரிடம் காணப்பட்டது.

ஏற்கனவே, இலக்கிய நண்பர் திரு. விஸ்வலிங்கம் அதனை வெளியிட வேண்டும் என ஆர்வத்துடன் கடிதங்கள் பல வரைந்திருந்தார்.

சீ. ஏ. எலியாசனின் "ஓவியம்" என்ற குறுங்காவிம் மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக வருகிறது.
நண்பர் எலியாசனிடம் கவிதா ஆற்றலுண்டு அதனை இந்த குறுங்காவியத்தின் மூலம் புரிந்துகொள்ளலாம்.

அதுமாத்திரமல்ல
ஓவியத்தின் அட்டைப்படத்தை ஓவியமாக்கியதின் மூலம் மலையக இளைய தலைமுறை கலைஞர் அற்புதராஜும் அறிமுகமாகிறார்

மலையகமெங்கும் உள்ள ஆற்றலும், திறமையும் கொண்ட-வர்களை அறிமுகப் படுத்த வேண்டும் என்கிற எங்கள் பணி தொடர்கிறது.

எமது பயணத்திற்கு தடையாக இருக்காமல், வழித்துணையாக எங்களோடு பயணம் போக வாருங்கள்.

அந்தனி ஜீவா
நிர்வாகி
மலையக வெளியீட்டகம்.

25-9-1988

# அணிந்துரை

மலையக இலக்கிய உலகில் அறுபதுகளில் வீசத்தொடங்கிய காற்றில் முகையவிழ்த்த மலர்களில் மிகச்சிலவே இதுவரை வெளியில் மணம் விட்டுப் பிரகாசித்திருக்கின்றன.

அதுசமயம் தமிழ்நாட்டிதழ்களும், நூல்களும் ஏராளமாகவும், தாராளமாகவும் இங்கு வந்து குவிந்தன; கல்வி கூடங்களும், கலா நிலையங்களும் அருகிக் காணப்படும் மலையகத்தில் ஏராளமான ஏகலைவர்கள் அன்று உருவானமைக்கு அவ்வெளியீடுகளே வழிசமைத்தன

தமிழகத்துக் கவிஞர்களின் வழிநின்று, கவிதைகள் எழுதுபவர்கள் இங்கு நிரம்பவே தோன்றினர். சிறப்பாக, அவர்கள் எண்சீர் விருத்தத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டினர்.

மலையகத்தின் முதலாவது கவிதைத் தொகுப்பு நூலான "குறிஞ்சிப்பூ" வில் இடம் பெற்ற நாற்பத்தெட்டு கவிதைகளில் பதினெட்டு கவிதைகள் எண்சீர் விருத்தத்தில் அமைந்தனவே.

'தமிழச்சி' என்ற குறுங்காவியமும், 'போராட்டப்பாடலம்' என்ற குறுங்காப்பியமும் எண்சீர் விருத்தத்தில் அமைந்தனவேயாகும்.

இந்நூலில், நண்பர் எலியாசன், எண்சீர் விருத்தத்திலமைந்த "ஓவியன்" என்ற குறுங்காவியத்தைப் படைத்தளித்திருக்கின்றார்.

காலந்தாழ்த்திப் பூப்பதில் - தனித்துச் சிறப்பிக்கப்படும் வாய்ப்பு இருக்கின்றது; அடியொட்டி ஒதுக்கப்படும் அபாயமுமிருக்கின்றது

சமூகத்தில் பரிமாறப்படும் போதுதான் கலைகள் வளர்ச்சி அடையும் என்பதை உணர்ந்து, நண்பர் எலியாசன், தனது எழுத்தோவியம் ஒன்றை நூலாக தந்திருக்கின்றார்.

அவரது கவிதை ஆற்றலுக்குக் கட்டியங்கூறுவனவாக அமையும் பல்விடயங்களை 'ஓவியன்' நமக்குக் காட்டித்தருகின்றது; ஓவியமும் காவியமும் ஒன்றுயிணைந்து பாவியற்றும் பாங்கினை அவைகளில் கண்டு மகிழலாம்.

கொழுந்து ஆயவும், தெங்கு பொறுக்கவும், ரப்பர் பால் சேகரிக்கவும் உரித்தானவர்களாக மட்டுமே - முகம் தெரியாத முத்திரைப் பெண்களாக, இலங்கைத் தபால் தலைகளில் இன்று வரையிலும் சித்தரிக்கப்படும் பெண்களுக்கு – அருளன் என்ற ஓவியன் – கதாபாத்திரம் மூலம் உருவம் கொடுத்திருக்கும் இந்த முயற்சி பாராட்டுதற்குரியது; பல வழிகளிலும் ஆதரிக்கப்பட வேண்டியது.

வெல்க; வாழ்க!

சாரல் நாடன்
–தலைவர்–
மலையக கலை இலக்கியப் பேரவை.

டன்சினன்,
பூண்டுலோயா.
31-08-88.

# ஓவியம்

குஞ்சுபெரி குன்றமலை பெண்மை யாகும்
    குவிந்தபெரு பனிமுகிலோ ஆடையாகும்!
நெஞ்சுவந்து சுரக்கின்ற அமுத ஊற்றோ
    நெடும்புனலாய் பாய்ந்தொழுகும் அழகுத் தோற்றம்!
மிஞ்சிவிட கலைமனதில் கவிதை யாகும்!
    கருத்தமைந்தக் காளையவன் வியப்பில் சூழ்ந்து
நெஞ்சுருகும் நினைவெழுந்து அழகை ஏந்தி
    நெடுந்திரையில் ஓவியமாய் சமைக்க முனைந்தான்!

தென்றலையும் தூரிகையால் தீட்டிக் காட்டுந்
    திறமைமிகு ஓவியனும்! அழகில் வீழ்ந்து
குன்றனைய எழில்பெருக்கை இன்பந் தீட்டும்
    குமரனையே குன்றமலை பெற்ற தென்ன!
சென்றொதுங்கி முகம்வீழும் குழலே அன்றி
    சித்திரத்தில் வடிப்பதற்கு ஒன்றும் இல்லை!
என்றதைப்போல் ஆடையிட்டு மூடி வைத்து
    ஏறிவரும் ஏந்திழையைத் தீட்ட நினைத்தார்[

சிற்றருவி சந்தநய சிந்தி சையில்
    சிந்தைமனம் ஒன்றிணையச் சிறக்க நின்றான்!
பொற்கலசம் பூவையர்க்குப் பொலிவே யென்று
    பூட்டிவைத்துக் களஞ்சியம்போல் காத்தல் நன்றோ!
சிற்றரும்புத் தேயிலைக்குள் சிற்றி டையும்
    செழுந்தோற்றச் சீரழகும் மூடி வைத்துக்
கற்றைகுழல் தானதனையும் ஆடை யிட்டுக்
    காத்துவிட்டால் ஓவியத்தில் சிறப்ப துண்டோ!

துடிப்பிளமை நெஞ்சத்தில் துயரங் கூட
    தோகையரின் பேரழகை வண்ணந் தீட்டி
வடித்துவிட முடிவதுண்டோ என்றே ஏங்கி
    வடித்தசிலை யாகஅவன் அமர்ந்து நின்றான்!
குடித்தமது வெறியுற மயக்கங் கொண்டு
    குடைந்துறியும் திறனழிந்த வண்டைப் போல்
ஒடித்தெறிந்து சீர்படுத்தி அரும்பைக் கோதும்
    அணங்கொருத்தி விழிசுழல நெஞ்சந் தைக்கும்!

ஆயிரத்தில் ஒருத்தியவள்! அணங்கோ மயிலோ!
    அடிதுவங்கி முடிவரைக்கும் மூடி வைத்துத்
தேயிலைக்குள் நின்றாடும் தோகைக் கண்டால்
    தூரிகைக்கு வேலைவரும்! தாகந் தீரும்!
ஆயினுமென் நெஞ்சத்தில் ஆவல் தீர்க்க
    அழகுநடம் புரிந்தென்முன் வரு வாளோ!
நோயுறையும் நெஞ்சத்தில் நோவைத் திர்த்தால்
    நூறென்ன ஆயிரமும் படைத்துக் காப்பேன்!

மீண்டுமவள் திண்டிமனம் விழிகள் சுழற்றி
மலரிருக்குள் முல்லையென முறுவல் பூத்து
நீண்டிருக்கும் வரிசைநிரைத் தாண்டிக் கோதி
தொடிப்பொழுதில் வந்திடுவேன்! நிற்பாய் சற்று
வேண்டியவள் விழிக்குறிப்பால் சேதிச் சொல்ல
வேட்கைமனம் துடிதுடிப்பில் எழுந்து நிற்கும்!
மூண்டெழுந்த ஒளிபுனலே! முறுவல் பூக்கும்
முழுநிலவோ வென்றெண்ணி அயர்ந்துப் போனான்!

கங்காணி இடுங்கூச்சல் காதைப் பிளக்கும்!
கணக்கனவன் வாய்ப்பிளக்கக் குன்றம் அதிரும்!
கொங்காணி ஆடையிட்ட மகளிரெல்லாம்
குணக்கேடர் கூச்சலிட யாது செய்தோம்!
வெங்கோபம் கொண்டதென்ன! வெறிநாய்ப் போல
வேண்டாத மொழிகூற யாது செய்தோம்!
சிங்கேறு போன்றயிளங் காளை யில்லா
மலையகமோ! என்றெண்ணி ஏங்கி நின்றார்!

குடைசாய்த்துத் தலைநிமிர்ந்துக் கணக்கன் நிற்கக்
கூடையோடு மகளிரெல்லாம் குனிந்த வாறு
நடைசாய்ந்து நடக்கின்ற நளினங் கண்டு
நாய்நரிகள் குதறிவிடும் என்றே அஞ்சி
இடைவேந்துப் படங்கிருக்கிச செல்லு கின்றீர்!
என்றருளன் நெஞ்சத்துள் நகைத்துக் கொள்வான்!
தடைபாய்ந்து வருவதற்குத் தயக்கங் கொண்டு
தையலவள் தடுமாறி நிற்கக் கண்டான்!

முற்றயிலை மொட்டோடு பிடுங்கி வந்தாய்!
மூதேவி நீயுமொரு மூண்டை யாமே!
நிற்பதினால் பயனில்லை! வீடு செல்வாய்!
நாயென்றான்! பேயென்றான்! பின்னு மந்த
அற்பமனக் கணக்கனவன் செப்பு கின்றான்!
"ஆடையென இடையிருக்கிப் பயனே இல்லை!
விற்றுவர வந்தீரோ! வேலைக்கா வந்தீர்!"
வார்த்தைதனில் கோர்த்திழைத்த விசத்தைக் காணீர்

விழியோடி விளையாடிக் கோதிக் கொள்ள
வெறிக்குணத்துக் கணக்கனுக்கு வேட்கை இருக்கும்!
எழிலாடும் ஏந்திழையாள் மறுதாய் அங்கு
எரிநெருப்பாய் நின்றிருந்தான்! அதனால் அவனே
தொழிற்கேடு இழைத்துவைக்குந் துணிவு கொண்டான்!
திட்டி வைத்தான்! வாய்க்கேடு ஆகும் வரை!
அழக்கேடு அவனுக்கு வரும் என்றே
அடியெடுத்து வைத்தானோ "லயம்" நோக்கி!

பத்துமணி வரைக்குமவள் உழைத்த தெல்லாம்
படுமோசம் செய்தானே கணக்கன்! அவன்
செத்துமடி வதென்றுளோ என்றே யெண்ணி
சிற்றிடையாள் லயம்நோக்கி நடக்கும் போது
அத்தனையும் பார்த்திருந்த அருளன் நோக்கி
"அருவிமலைச் சாரலதன் அழகுத் தோற்றம்
அத்தனையும் உன்னிருவில் கண்டேன்! அதனால்
ஆற்றிவிடு என்தவிப்பை என்றே உரைத்தான்!

மலையகத்துப் பேரழகை மாய்க்க வெண்ணும்
மனக்கேடு குணவான்கள் தன்னைக் கண்டாய்!
தனைகனத்தத் தருக்கர்கள் வாழ்வதுண்டோ!
தடுமாற்றம் அகற்றிவிடு! தலை நிமிர்வாய்!
சிலைவடிக்குங் கலைஞான முள்ளோர் இல்லை!
சித்திரத்தில் உனைவடிக்கச் சித்தங் கொண்டேன்!
தலைமறைக்குங் கொங்காணி ஆடை அகத்து!
தையலுந்தன் முழுவழகைக் காணல் வேண்டும்!

"படங்கிருக்கி இடையொடுங்கிப் போவதெல்லாம்
பார்த்திருக்க அழகென்று நினைத்தாயமோ;
முடங்கிருக்கும் முழுவழகும் பூத்து விட்டால்
மூண்டெழுமோர் காதலுக்கு எல்லை உண்டோ!
படங்கெடுத்து விட்டெறிவாய்! பாவை யுந்தன்
பளிங்குருவ எழித்தோற்றம் பருகு தற்கு
உடன்படுவாய்" எனமொழிய அன்ன வளோ
உளங்கூடும் நினைவலைகள் கோதி மகிழ்ந்தாள்

சிற்றுடைப் பெண்மயில் சித்திர மாகிட
பற்றினன் தோள்வணப்பை – நெஞ்சம்
உற்றதோர் கலைவணப்பை – எழில்
முற்றிலும் சேர்த்திட தூரிகை எடுத்தவன்
நற்றிறம் கலைசமைததான் - அந்தப்
பொற்றட மாதிசைந்தாள்!

திங்களை நிகர்ந்திடும் கொங்கையின் முன்றிலில்
கங்குலை நிகர்த்திருக்கும் – அது
பங்கமோ எனநினைத்தான் – இல்லை
மங்கையின் சாரமாம்! மாந்தளிர் மேனியில்
பொங்கிடும் பொற்கலசம் – அதைத்
திங்களாய் தீட்டிவைத்தாள்!

ஆடையை முகிலென மூடிட மேனியை
ஓடிடத் தூரிகையோ – அங்கே
கூடின பேரழகாம் - மனம்
நாடிய உணர்வலை கூடிடும் இடமென
பாடினன் ஓவியத்தில் – நெஞ்சம்
ஏடென மனம்விரித்தான்!

## இயல்

மின்னொளி புன்னகை பூத்திடும் செவ்விதழ்
இன்னுயிர் தான்பறிக்கும் - மலர்
என்றிடும் வண்ணத்தில் - அவள்
நன்றெனத் தீட்டிட நானிலம் வந்தவள்
குன்றெனும் பேரழகாள் - என
நன்றென வாழ்த்துரைக்கும்

ஆடிய தோகையின் ஆயிரம் சாயலை
ஓடியத் தூரிகையால் - எழில்
கூடிடச் செய்தமைத்தான்! - உயர்
நீடியக் குன்றினில் நாடக மயிலென
கோடியில் இவளொருத்தி - என
பாடிடு வையகமே!

பொங்கிய உவகையில் பூத்திடும் கவிமலர்
பங்கமின்றித் திரையில் . எழில்
பொங்குகின்ற நிலையில்
எங்குல மாதரை எழில்நலந் தொடுத்தாள்
ஏற்றிடு வையகமே - என்றும்
போற்றிடு வையகமே!

## வேறு

குடந்தேனே! குவிந்திருக்கும் பேர ழகோ!
குன்றருவிக் குடைந்தெடுத்தக் குளிர் நிலவோ
தடந்தோளன் தனித்திருக்கும் தன்மை கண்டு
தனல்மாற்றத் தழுவவரும் பொற் கொடியோ!
அடங்காதப் பேராவல் அரும்பி நிற்கும்
அருங்காதல் விழிக்குள்ளே! "நின்றுடு
முடங்காத மலையகமே" என்றே உரைக்கும்
முழுதுணர்வும் தேன்துளிர்க்கும் ஓவி யமாம்!

பலநாளும் பாவையவள் வந்து போனாள்!
பனிமலரில் தேன்துளிர்க்கும் காட்சி யானாள்!
மலைநாடும் உயர்வணப்பில் காதல் கொள்ள
மாறாத எழில்வணப்பைத் தீட்டி வந்தாள்!
தலைமுடிக் கிடக்கின்ற மகளிர் எல்லாம்
தன்மானச் சிறப்பெய்ய வழிகள் வேண்டும்!
கொலையாகும் இனக்கேடர் கொடுமை எல்லாம்
கொன்றொழிக்குந் திறம்வாய்ந்த மகளிர் வேண்டும்!

வாதுரைத்து நிற்கின்ற வம்பர் கூட்டம்
    வகைகெட்டுச் சாவதற்கு வழிகள் ஆய்ந்து
காதலிக்குக் கனிவாகச் சொல்லி வைத்தான்!
    களம்நோக்கும் போர்நோக்கால் உரிமை வாழ்வு!
வேதனைக்கு விருந்தாகி விம்மிச் சாக
    வாழ்வெங்கும் அவலங்கள் நிறைந்த தென்ன!
தீதனைத்தும் வந்துலவச் செய்தக் கூட்டம்
    திறமான வாழ்விங்கு பெற்றார் கண்டாய்!

ஓவியத்தில் நீயொருத்தி அழகு பெற்றாய்!
    ஒளிர்கின்றாய் பேரழகாய் கலைக்குன்! நல்ல
ஆவியொத்த உயர்வணப்பே அன்பின் மாதே
    ஆறறிவும் தேய்ந்துவர நாட்டில் கேட்டை
ஏவிவித்தை செய்கின்றார்! ஏழை வாழ்வை
    எரிநெருப்புக் குள்ளாக்கிப் போடு கின்றார்!
கூவிவித்து வருகின்றார் கொள்கை என்று!
    குறையாத செல்வத்தில் புரளு கின்றார்!

என்றாய்ந்து அவனுரைத்தச் சேதி எல்லாம்
    ஏந்திழையின் நெஞ்சத்துள் நெருப்பாம் காணீர்!
கொன்னாய்ந்துத் தொலைப்பதென்றோ கொடுமை எல்லாம்!
    குணக்கேடர் சாவதென்றோ! ஏழை மக்கள்
வென்றேறி உரிமைவாழ்வு பெறுவ தென்றோ!
    வாலிபமே வற்றாத பெரும் ஊற்றே
நன்றாகும் யாவர்க்கும் பொதுமை என்று
    நவிழ்கின்ற நாளென்றோ என்றே ஆர்த்தாள்!

## இயல் 4

குன்றருவி குமிழ்ச்சிரிப்பைக் கொட்டி நிற்கும்
    குளிர்நிலவும் அத்தோடு போட்டிக் காணும்!
நின்றுருகி நெடுவானில் நினைவை அழுத்தி
    நேரிழையை எவ்வாறு அமைத்தல் கூடும்
என்றருளன் நினைவேங்கி இருக்கும் காலை
    ஏடேந்தும் கவிமுன்னே காட்சி போன்று
தென்றலலை மெல்லிடையாள் மருதாய் வந்து
    தீட்டாதே ஓவியம்போல் முன்னே நின்றாள்!

குழல் வனப்பைக் கண்டந்தக் காளை நெஞ்சம்
    குறையாதப் பேரழகை ஒன்றாய் சேர்த்து
எழில்துடிப்புக் குன்றிடுக்கின் இடையில் விட்டில்
    ஏந்திழையில் பேரழகோ பேரின்ப மாகும்!
சுழியோடும் மலையருவி வீழ்ச்சிப் போன்று
    சுவையூறும் சிந்தைக்கு விருந்தாய் மாறும்!
விழியோடிக் கொய்தெடுக்கும் வனப்புஞ் சேர்ந்து
    வரையாத ஓவியத்தை நெஞ்சம் பதித்தான்!

நிலவோடு அவன்கொஞ்சும் அழகைக் காண
நினைவழுந்தும் உணர்வெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
மலைநாடும் கலைக்கூட மாகத் தோன்றும்
மாறாதச் சுவைவண்ணம் படைக்க நெஞ்சம்
"நிலவேநீ நிலவோடு கொஞ்சு கின்றாய்
நெடும்புனலின் பக்கத்தில் சற்று நிற்பாய்!
அலையாடும் குழலுக்கு அழகைச் சேர்த்து
அழியாத ஓவியத்தில் சமைப்பேன்" என்றான்!

வெண்முகிலை மென்துகிலாய்ப் பற்றிக் கொண்டு
வேட்கைமது தானருந்தும் மயக்கம் போன்று
பெண்ணொருத்தித் திகழ்கின்றக் காட்சி தன்னை
படைத்துவிட மனங்கொண்டே பாவை நீயே
எண்ணமெல்லாம் ஒன்றடுக்கி நிலவை நோக்கி
ஏக்கமுறும் நினைவலைகள் முகத்தில் தேக்கு!
வண்ணமெல்லாம் நான்சேர்த்து சமைக்கும் வரை
வடிவழகுத் தோற்றத்தை மாற்றா திருப்பாய்!

பூத்துவரும் வெண்ணிலவும் பொலிவைப் பூண
பொங்கியெழும் எழில்முகத்தைச் சற்றே உயர்த்து
சேர்த்தமனம் ஒன்றாகத் திகழ்வாய்ப் பெண்ணே!
சிந்திவரும் புன்னகைக்கு மின்னல் தோற்க
போர்த்தொடுக்கும் கூர்வாளின் ஒளியை ஏற்று
புரிவாயே எழில்நகையை! புவியோர் எல்லாம்
பார்த்துன்னை பரவசங்கொண் டாடி மகிழ
பனிமலரில் தேன்துளியாய் திகழ்வாய் என்றான்!

மூண்டெழுந்தக் கலையுணர்வை முழுதும் வடித்து
முடிக்குமுன்னம் பெண்ணவளோ அச்சங் கொண்டு
"நீண்டபொழு தாகிவிட்ட நினைவை மறந்து
நிற்கின்றீர்! இன்றெனக்கு வாய்க்கும் பேச்சு
மாண்டுவிடத் துடிப்பெய்யச் செய்யக் கூடும்!
மடிக்குள்ளே தீவைத்துக் காக்கும் அன்னை
தீண்டவரும் நாகமெனச் சீறிப் பாய்வாள்"
தையலவன் உரைத்தவாறு அகற்றிச் சென்றாள்!

## இயல் 5

முடியாத ஓவியத்தைக் கரத்தி லேந்தி
முழுதழகை வார்த்துவிட தவித்து நின்றான்!
இடையாடித் துடித்தேங்கும் தவிப்பை மட்டும்
இன்றெனக்குக் காட்சிதந்தால் போதும்! மற்றும்
தடையேதும் இலையிந்த ஓவி யத்தில்!
தவித்திருந்தான் காளையவன்! தோகை வரும்
நடைபாதை தனைநோக்கி வைத்த விழி
நகர்த்தாமல் ஏக்கமெழ நின்றி ருந்தான்!

வந்துவிழும் பனித்துளிகள் வார்த்தை யாடும்!
வாயவிழ்ந்த மலரிதழில் சேதிச் சொல்லும்!
நொந்தவிழ்ந்த நெஞ்சததில் சோகம் எழும்!
நினைவெல்லாம் அவளெனவே ஏங்கி நிற்கும்!
அந்திநிலா சுவைபடைக்க மறுப்ப தில்லை!
ஆனாலும் பெருந்துயரில் வீழ்ந்து விட்டான்!
சிந்தனையில் துடிப்பமைந்த உணர்ச்சி வெள்ளம்
சித்திரத்தில் ஓடவிட வழிகள் இல்லை!

இதுவரைக்கும் நான்என்றும் காத்த தில்லை!
ஏங்கிமனம் இவ்வாறு தவிதத தில்லை!
மதுவடிக்கும் செவ்விதழாள் இன்று என்னை
இவ்வாறு புடம்போட்டுப் பார்க் கின்றாள்!
எதைவைத்து அவளழகைப் படைத்தல் கூடும்!
ஏந்திழைக்கு நேரொத்தப் பொருளுமுண்டோ!
வதைப்பட்ட நெஞ்சத்தைத் தேற்றிக் கொள்
வழியொன்று இல்லையென்று தவித்து நின்றான்!

நிலவெழுந்து வானத்தில் ஆட்சி கொள்ளும்
நினைவெழுந்த நெஞ்சத்தைத் துயரங் கொள்ளும்!
ஓவியமைந்தச் சிற்றோடை சிரித்துக் கொள்ளும்!
ஓயாதப் பெருங்கவலை நெஞ்சை வெல்லும்!
கலையமைந்தப் படைப்பென்று விண்மீனும்
கதிர்நிலவின் பக்கத்தில் கண்ணைச் சிமிட்டும்!
தலைக்கவிழ்ந்துத் தவிப்போடு வீட்டை நோக்கி
தள்ளாடி நடையளந்து அருளன் சென்றான்!

## இயல் 6

கூடையொடு தாளமிட்டு வளைகள் குலுங்கும்
கொங்காணி ஆடைவந்துக் குழலை மூடும்!
பேடையெழில் அன்னமென பெண்கள் கூடி
போகின்ற பாதைதன்னைப் பார்த்து நின்றாள்!
ஆடையெழில் தெரியாமல் படங் கிருக்கி
ஆனவரை மூடிவைத்துச் செல்லு கின்றாள்!
மேடுமலை சென்றேறி பெண்கள் கோத
மாதவனை மட்டுமவள் காண வில்லை!

சங்கொலிக்கு எதிரொலிக்கும் குன்றின் பக்கம்
சரிந்துவிழும் கூந்தலென நீரின் வீழ்ச்சி!
பொங்கிவரும் புனலோடை சந்த மெல்லாம்
பூவையரின் பேச்சொலிக்குள் அடங்கிப் போகும்!
தங்கநிகர் கதிரொளிக்கு ஆற்றா வண்ணம்
தளிர்மீது மின்னிவிட்ட பனியும் மாயும்!
மங்கையரின் குழல்மூடும் ஆடை போன்று
மாமலையில் வெண்முகிலோ மூட்டங் கொள்ளும்!

துடிப்பிளமைச் சாகவில்லை! துயர மட்டும்
துவைத்தெடுத்துத் தையலரைப் போட்ட தென்ன!
எடுப்பெடுத்துக் கூடைதாழ்ந்துப் போன தென
ஏந்திழையர் வாழ்விலென்றும் வீழ்ச்சி யாமோ!
கடுகடுத்தப் பனிக்குள்ளே கரங்கள் கோத
கலகலத்தச் சிரிப்பெல்லாம் மாய்வ தென்ன!
நெடிதுழைக்கும் நேரிழையர் துயரம் மாற்ற
நீடுழைக்கும் காளையர்கள் செய்த தென்ன!

கங்காணி வழக்கம்போல் கூச்ச லிட்டான்!
கணக்கனவன் கண்டபடி வைது வைத்தான்!
சிங்கேறு காளையர்கள் இல்லா நாடோ!
சீரழிந்துப் போவதற்கோ குன்ற நாடு!
மங்காத புகழாரம் சூட்டி வைத்து
மலையகத்தில் கலைக்கோயில் சமைக்க வெண்ணி
ஏங்காதப் பொழுதில்லை! ஆனல் அந்த
ஏந்திழைக்கு வழியில்லை காட்டி நல்க!

## வேறு

பேராவல் துள்ளியெழ
பொடிநடையும் மிடுக்காக
ஆருத இன்பத்தில்
அழகுநடை தான்பயின்று
வாராளோ பெண்மயிலாள்
என்றருளன் ஏங்கிநிற்க
கூரான விழிசுழற்றி
குறிப்பேவி கோதைநடந்தாள்!

குன்றுடும் வெண்முகில்கள்
குவிந்தாடும் வண்ணம்போல்
சென்றேறி நின்றதுவோ
குழல்மூடி வெள்ளாடை!
வென்றேடி வரும்படையோ
வளைக்குலுங்கக் கரமிசைத்து
சென்றேடி கோதுகின்ற
சிற்றிடையார் பெருங்கூட்டம்!

காளைக்குத் தனிவிருந்து!
கவிதைக்குத் தேன்மருந்து!
வேளைக்கு விருந்தான
அமுதாகும் அவள்தோற்றம்!
நாளைக்கு வருவேன்தான்
என்றுரைத்துச் சென்றவளோ
கேலிக்கு விருந்தாக்கிக்
கடந்தென்னைச் செல்வதென்ன!

நடைமிடுக்கு தானில்லை
    நடைமெலிந்துச் சோர்கின்றாள்!
இடையொடுக்குங் கூடைக்குள்
    கொழுந்தில்லை! இருந்தாலும்
விடக்கொடுக்கு விசக்காச்சல்
    போன்றவளோ நலிகின்றாள்!
கடைவிழிக்குள் பெருஞ்சோர்வு!
    காரணந்தான் அறியானே!

ஊர்பெய்த வம்பளப்பில்
    உளஞ்சோர்ந்துப் போனாளோ!
யார்செய்தக் கொடுமையினால்
    இவனிற்றுத் துவர்கின்றாள்!
சீர்செய்த சித்திரமாம்...
    சீரழகும் சிதைந்ததென்ன!
போர்வினைத்த அவலம்போல்
    புலம்பிமனம் வாடுகின்றாள்!

கற்றைக்குழல் நெய்யிழந்துக்
    காற்றோடு பறப்பதென்ன!
நெற்றியுமிழ் பொற்சுடரும்
    நெடுங்கேட்டில் தேய்வதென்ன!
பொற்கவசங் கொங்கைகளும்
    கச்சைக்குள் தளர்வதென்ன!
சிற்றிடையாள் சிந்தனைக்குள்
    சேர்ந்துயர் யாதாமோ!

தட்டெடுத்துக் கங்காணி
    கூச்சலிட்டுக் கூப்பிட்டான்!
நெட்டிடுக்குக் குன்றத்தில்
    நின்றாய்ந்த நேரிழையர்
விட்டுநிரை விரைந்தனரே
    நிறுவைக்கு! மங்கைமட்டும்
எட்டிவைத்து நடந்தேற
    இயலாதுத் தளர்கின்றாள்!

நேற்றிருந்தச் சுகமில்லை!
    நீர்விழிக்குள் சோகமெல்லாம்
ஊற்றெடுக்க எனைநோக்கி
    உளம்மாய்ந்துச் சோர்கின்றாள்!
போற்றிவைத்தச் சாயலெல்லாம்
    புகுந்தவிடம் நானறியேன்!
காற்றடித்த நாணலென
    கன்னியவள் அயர்கின்றாள்!

## இயல் 7

ஊற்றெடுக்கும் மலைக்குன்றில் உவப்பெடுத்து நின்றேன்
உளந்துடித்துப் போவதற்கு அவளென்ன செய்தாள்!
நேற்றெடுத்து ஒளியழகை என்னிடத்தில் தந்தாள்!
நிலைத்திருக்கச் சித்திரத்தில் தீட்டிவிடு முன்னே
கற்றடித்துச் சருகைப்போல் சலசலத்துப் போனாள்!
கலையழகில் அவளழகை சீர்செய்ய துடித்தேன்!
ஏற்றிவைக்க ஒளிவிளக்கைக் குன்றத்தில் நின்றேன்!
ஏமாற்றம் ஏழைக்கு! வேறென்ன மிஞ்சும்!

நீண்டபனி குன்றமலை நீளடுக்கில் நின்று
நித்தநிதம் உழைத்துருகும் பெண்ணழகைக் கண்டு
தீண்டிமனம் ஓவியத்தில் தீட்டிவரும் போது
திம்பான முடிவுக்குள் தோகையேனோ வீழ்ந்தாள்!
ஆண்டிமனம் பாத்திரத்தில்! அதில்வீழும் சோற்றில்
ஆசைமனம் ஓவியத்தில் அவளழகு வனப்பில்!
வேண்டிமனம் செய்ததவம் ஆனபயன் தந்தால்
வடிவழகு ஓவியத்தில் கலைக்கோயி லாகும்!

நெடும்பொழுது அவன்மனதோ துடித்தேங்கும் போது
நடையயிலும் சிற்றிடையாள் பெண்ணொருத்தி வந்தே
படம்வரையும் பக்குவத்தை என்தோழி உரைத்தாள்
பாவையவள் இனிவந்து பார்க்கவழி இல்லை
கொடுமனது பெற்றோர்கள் அவள்மாற்றங் கண்டு
கன்னிக்குக் காவலிட்டு வைத்தனரே! நல்லத்
திடமனது உனக்கென்றால் திருமணத்தை முடித்துத்
தையலவள் வாழ்வுக்கு வழிவகுப்பீர் என்றாள்!

என்றவளோ இயம்பிவிட ஏக்கத்தில் வீழ்ந்து
ஏந்திழையோ எழிலானப் பூவையவள்! இந்தக்
குன்றமலை மீதினிலே குதித்தோடும் நல்லக்
குறையாதக் கலையருவி! கன்னியவள் தன்னை
சென்றடைந்து மணமுடித்துக் கொண்டபின்னே நறுஞ்
சித்திரத்தில் வடிப்பதற்கு வாய்ப்பற்றுப் போகும்;
நன்னுருக்கி செய்திழைத்த நறுங்கோலச் சிற்பம்
நல்லதொரு ஓவியத்தில் அமைத்தபின்னே மணமாம்!

கனிந்தசுவை யானாலும் கரமிருந்தால் கசக்கும்!
கலைக்கோயில் என்றாலும் உடனிருக்கச் சலிக்கும்!
நினைந்தசுவை ஏக்கத்தால் பெருக்காகும்! அந்த
நேரிழைக்கும் இதுவாகும்! பெண்ணழகை நல்ல
புனைந்தமலர் ஓவியத்தில் படைத்தபின்னே மணமாம்!
புரிந்தின்பம் சுகித்திருக்கத் தடங்களில்லை! அவனை
நினைந்துமனம் ஏங்குவதை நீயறிந்துக் கொள்வாய்!
நீள்விழிக்கு இதைஉணர்த்தி வைப்பாயாம்" என்றாள்!

## இயல் 8

தாயெனக் குரைத்து நடுத்தெரு நின்று
நவில்கின்றச் சொல்லறிவாய் — மானம்
போயின வென்றால் புவிதனில் வாழ்ந்துப்
பயனென நீஅறிவாய் - இந்த
வாயுள மட்டும் வார்த்தைகள் உண்டு
வம்புக்குக் கேடாமோ - நான்
தாயெனப் பிறந்தும் தன்வெனத் துடிக்கும்
துயரங்கள் நீயறியாய்!

நொந்துளம் வேக வேதனைப் பெருக
வாழ்கின்றேன் . . நீயறியாய் . . . நீ
சிந்தனைச் செய்வாய்! சிறுமதி உனக்குச்
சேர்க்கின்றப் பேர்யாரோ — அங்கே
இந்திய மண்ணில் உனக்கெனக் காளை
ஏக்கத்தில் மாய்கின்றாள் — நாம்
சொந்தவூர் சென்று சீருடன் மணத்தைச்
சிறக்கின்ற வழிசெய்வேன்!

தாயவள் உரைத்தாள் சேயவள் துடித்தாள்
தவிக்கின்றாள் மனமுடைந்தே — நெஞ்சில்
ஆயிரந் துன்பம் அனலெனக் கொதிக்க
அவதிக்குள் வீழ்கின்றாள் — அம்மா
நீயுரைக் கின்ற வார்த்தைக்குள் எல்லாம்
நானிங்கு ஏற்பதுண்டோ! — என்
தாயகம் இதுவே! தலைவனும் அவனே
தடுப்பதற்கு யாருமில்லை!

## இயல் 9

முத்துதிர்த்துச் சிரிப்பதைப்போல் முறுவல் பூக்க
மூவுலகும் அவனடியில் தவமே கிடக்கும்!
கைத்திறத்தால் கருத்தமைய அழகைத் தீட்ட
காலமெல்லாம் அவளழகை அவனி காக்கும்!
சித்திரத்தில் அவள்வடிவு சிந்தை அள்ளும்!
சிற்றிடையின் நுற்பத்தை வரையு முன்னே
கத்தரித்து விட்டாற்போல் ஓடிச் சென்றாள்!
கலையமைப்பில் முழுதமைக்க வழிகள் இல்லை!

### வேறு

ஓங்குமலைச் சாரலிலே உயர்ந்தநிதி யானவள்!
ஊற்றெடுக்கும் கற்பனைக்குள் உவந்தெடுத்தக் கலையே!
ஏங்கிதவம் நான்புரிந்து வரைந்துவரும் போது
ஏங்கவிட்டு ஏகிவிட்டக் கதையென்ன சொல்வேன்!
வீங்கிமனம் வெந்துடிப்பில் வீழ்ந்துவிடச் செய்தாள்!
வேல்விழியாள் வந்தழகுக் காட்சிநலம் தொடுத்தால்
தீங்கனிவாய் சித்திரத்தை சிற்பமென முடித்து
திறமைமிகுக் கலையுருவில் மலையகத்தைக் காண்பேன்!

# ஓவியம்

சிற்றருவிப் பாய்ந்துவிழும்! சிந்திசையும் தவழும்!
சிந்தனையில் அவள்வடிவு ஏகமெனத் தோன்றும்!
கற்பனையில் கனிந்துவரும் எழில்வடிவு யாவும்
கருத்தொருமை கலைத்திறமை கொண்டெழுதி முடிக்க
தற்பொழுது மாலைநிலா வந்துமனங் குடையும்!
நினைவலைகள் மோதியெழ தூரிகையை எடுத்தேன்!
அற்புதமாய் அவள்வடிவு ஆங்கமைதிக் கொள்ள
அரைநொடிக்குள் முழுவடிவும் சிறுகோட்டில் அமைத்தேன்!

குன்றமலைத் தலைவரெல்லாம் குதித்தோடு கின்றார்!
கூக்குரலால் போர்க்கோலாம் போட்டாடு கின்றார்!
நன்றிமனம் இல்லாத நாயகர்கள் வீட்டில்
நீடுழைக்கும் ஏழைமகள் ஓவியங்கள் உண்டோ!
சென்றதிசை ஊர்தோறும் வாங்கிவந்தப் படங்கள்
சுவரேறி காட்சிதரும்! ஏழைமக்கள் தம்மை
நன்றெனவே வரைந்தெடுத்த ஓவியங்கள் உண்டோ!
நன்றிகெட்ட மானிடனே நீயெண்ணிப் பார்ப்பாய்!

புகழ்பூத்தக் கூட்டமென புகழ்ந்தாடு கின்றார்!
பொருள்சேர்த்து நித்தநிதம் ஊராளுகின்றார்!
அகழ்வார்க்கும் வாழ்வளிக்கும் பொன்னிலமே போன்று
அனைவர்க்கும் வாழ்வளிக்கும் ஏழைமக்கள் எங்கே!
நகைப்பார்க்கு இலக்காகும் ஏழைமக்கள் வாழ்வு!
நரிக்குணத்து நாயகர்க்கு வாழ்வளிப்ப தாகும்!
புகழ்பூக்கும் நற்கலைகள் நனிசிறக்க வேண்டும்
புகழ்பூத்து மலையகமே நீவாழ வேண்டும்!

பணக்கார வர்க்கத்தார் பயன்காண மட்டும்
பாரிலுள்ளச் செல்வங்கள் படைத்தானோ இறைவன்!
குணக்கேடர் குதித்தாடக் குவலயத்தில் ஆட்சி!
குறையாத வறுமைக்குள் ஏழையரின் வீழ்ச்சி!
பிணக்காடு போலன்றோ ஏழையரின் வாழ்வு!
பிறந்தபயன் எதுவென்று யாருக்குத் தெரியும்!
பணக்காரர் கைசுழற்றும் பம்பரம்போல் ஏழை
பற்றாத உணவுக்குள் பரதவிக்கும் வாழ்வு!

முத்தொளிரும் பெண்மயிலாள் ஆயிரத்தில் ஒருத்தி.
முறுவலிக்கும் பேரழகோ பெற்றோரின் உழைப்பே!
செத்துலன்றுச் சரிகின்ற சமூகத்தில் பிறந்தும்
செதுக்காத சிற்பம்போல் அவள்அழகுத் துள்ள
எத்தனையோ இடரெல்லாம் அவள்பெற்றோர் பெற்றார்!
இவ்வாறு அவளெண்ணி இருக்கின்றப் போது
தைத்துலன்றத் துன்பத்தால் தள்ளாடி வந்தாள்!
தையலவள் மேனிக்குள் தைத்தெடுக்கும் துயரே!

தடுமாறித் தள்ளாடித் தையல்நடை மாறி
　　தவித்தேங்கும் முகம்பார்த்து பேரதிர்வுக் கொண்டான்!
கொடியாடித் தவழ்ந்தாலும் கோபுரத்துக் கலசம்
　　கொஞ்சுமெழில் காட்டுகின்ற பேரழகு யாவும்
விடைகூறி சென்றனவோ! விரகென்னக் காய்ந்து
　　வேதனைக்கு இருப்பிடமாய் அவள்சென்ற தென்ன!
இடராடி அவள்போன விதமென்ன சொல்வேன்!
　　"இருக்கின்றாய் உயிரென்று" என்றவனே அணைத்தான்!

இன்னொரு இல்வாழ்வு முடிவுக்குள் ஆகும்!
　　இருக்கின்ற சுகமெல்லாம் துயருக்குள் வேகும்!
குன்றாடும் பூங்காற்றில் குடைந்தாடும் சுகமோ
　　குறையாமல் நாம்பெற்று இனிதின்று மகிழ்வோம்!
என்றாடும் சொற்கேட்டு அவனதிர்ந்துப் போனான்!
　　"எழிலாடும் பெண்மானே உனக்கென்ன?" வென்றான்!
இன்றோடு இன்னாட்டில் எனக்கில்லை உரிமை
　　என்றான சட்டத்தை நீயறிந்த துண்டோ?

அவளுரைத்த வார்த்தைக்குப் பொருள்றியா அருளன்
　　"ஆவதென்ன நானிருக்க உனக்கென்று" உரைத்தான்!
இவையுரைத்துக் காலத்தை வீணாக்கி விடடீர்!
　　இந்தியாவுக் கெனைவிரட்டும் நாள்நாளை யாகும்!
சுவைபடைத்த ஓவியத்தில் எனைக்கண்டு விட்டீர்!
　　சுயையான நினைவாகும்! அதைவைத்துக் கொள்வீர்!
சுவைப்புலமை சிந்தனையில்! வேறெங்கும் இல்லை"
　　சிற்றிடையாள் இவையுரைத்துச் சிலையாக நின்றாள்!

வேறு

எழுதிவைத்தச் சட்டத்தை
　　யார்மீறல் கூடும்!
உழைத்திருக்கும் ஏழையர்க்கு
　　எதுவுரிமை யாகும்!
அழுதழுதுத் துடிக்கின்ற
　　ஏந்திழையை ஏந்தி
முழுதுலகும் இருண்டாற்போல்
　　மதிமயங்கி நின்றான்!

மலையகத்து மார்பினிலே
　　மகிழ்ந்தாடும் மலரை
கொலைவகுக்குஞ் சட்டத்தால்
　　கொடுமைக்குள் ஊாக்கி
மலைபிளந்து வைத்தாற்போல்
　　மனம்பிளந்து வைத்தார்!
நிலையிழந்துப் போனதுவோ
　　நாட்டுரிமை யென்றார்!

மலர்க்கொடியை மார்பணைக்க
மயங்கிமனம் தவழ்ந்தாள்!
கொலைக்கொடுமை என்றழுது
குமுறியவன் துடித்தான்!
இலையெனக்கு வாழ்வென்று
ஏங்கிமனம் துடித்தாள்!
அலையெழுப்பும் புனலருவி
ஆகவிழி சோர்ந்தாள்!

குன்றருவி பாய்ந்துவிழும்!
குளிர்நிலவும் தவழும்!
இன்றிருக்கும் இன்பநிலை
என்றுவரு மாமோ!
சென்றதடி செய்ததவம்
அத்தனையும் செத்து!
தன்திருகப் பற்றியவள்
நெடுமூச்சுக் இளர்ந்தாள்!

கண்துடைத்துக் கொண்டவளோ
கவலைமனம் துறந்தாள்!
விண்படைத்த வெள்ளிநிலாக்
கோலமெனத் திகழ்ந்தாள்!
கண்படைத்தக் காரணத்தால்
கனிந்தசுவை பெறுவோம்!
பெண்மனதை நீரறிவீர்!
பிறந்தபயன் பெறுவோம்!

வெள்ளிநிலா சுவைநல்க
வந்தவிதம் காணீர்!
கள்ளவிழும் கற்பனையில்
கனிந்தசுவை பெறுவோம்!
துள்ளியெழும் குன்றருவித்
துவருமிடை என்றே
அள்ளிபுனல் சுவைபெருக
ஆனந்தம் கொள்வீர்!

நெடுங்குன்றின் மீதமர்ந்து
நீந்திசுவை பெறுவோம்!
தடங்குன்றும் நின்மார்பில்
தலைசாய்ந்து மகிழ
இடந்தந்தக் குன்றத்தை
ஓவியத்தில் தீட்டி
நெடும்வையம் அத்தனைக்கும்
அணியாகத் தொடுப்பீர்!

# ஓவியம்

புத்திளமை பூக்குழந்தன்
    பூங்கரங்கள் பட்டால்!
எத்தனையோ இன்பங்கள்
    அத்தனையும் சேர்த்து
புத்தமிழ்தேன் சுவைதொடுக்கப்
    புரிந்தானோ இறைவன்!
செத்துலவும் சவக்கூடு
    சாவதற்குள் சுவைப்பாம்!

எத்தனையோ அவளுரைத்தாள்!
    அத்தனையும் கேட்டு
பித்தனைப்போல் அவன்மயங்கிப்
    பாவையினை அணைத்தான்;
சித்திரத்தில் எனைத்தீட்ட
    நானுனக்கு வேண்டும்!
அத்தனையும் பார்த்துக்கொள்
    ஆனவரை யென்றால்!

உடைகளைந்த ஓவியத்தை
    உள்ளத்துள் கொண்டான்!
இடைநுடங்கும் வண்ணத்தை
    இருவிழியால் உண்டான்!
படைப்புருவம் பெறுவதற்கு
    பருகியவன் மகிழ்ந்தான்!
கடைச்சிரிப்பு அவள்சிரித்து
    உடையணிந்துக் கொண்டாள்!

உடைமையென ஒன்றில்லை!
    அத்தனையும் தந்தேன்!
நடைபயின்று நானிருக்க
    அதைசற்றுப் பார்ப்பீர்!
விடைதருவாய் என்றுரைத்து
    இச்சென்று வைத்தாள்!
நொடிப்பொழுதில் நெருங்குன்றப்
    பள்ளத்துள் வீழ்ந்தான்!

வாரியவள் உடலெடுத்து
    மடிமீது வைத்தான்!
காரிருளைக் கிழித்தநிலவே
    கற்பனைக்கு விருந்தே!
ஈருடலில் ஓருயிராய்
    ஒன்றிணைந்தோம் – இன்றோ
சீருடலைச் சிதைத்தனரே
    சீற்றங்கொள் இன்றே!

விற்போரே என்றுரைக்க
  வேற்புருவம் சமைத்தேன்!
கற்போருக்குக் கவியாகக்
  கலைவண்ணம் தொடுத்தேன்!
பொற்றேராய் பெண்ணழகு
  பொழிவமையும் முன்னே
சற்றேனும் தயங்காது
  சாய்ந்தேகிப் போனாள்!

மடிமீது உனைவைத்து
  மாறுதக் கனவில்
படியாத சுவையெல்லாம்
  படித்திருந்தப் போது
விடையாக நீகேட்டு
  விதிதாண்டிப் போனாய்!
முடியாதே உனைமறக்க
  மாமலையின் உயிரே!

குன்றத்தில் நின்றாடும்
  கொடிதாழ்ந்து விட்டாய்!
கொன்றுன்னைப் போட்டனரே
  கொடுஞ்சட்ட வாளால்!
நன்றொருத்தக் கலைச்செல்வம்
  நாம்காண்ப தெங்கே!
சென்றங்கு மறைந்தாயோ!
  சிதைத்தாரோ உன்னை!

மலையகத்து மார்வகத்தில்
  மலர்ந்தாடி இருந்தாய்!
தலைகவிழ்ந்துப் போவதற்குத்
  தன்மானங் கெட்டு
கொலைவகுக்குஞ் சட்டத்திற்குக்
  குடைபிடித்து நின்ற
மலையகத்துக் குணவான்கள்
  மார்பெனளச் சொல்வாய்!

நாட்டுரிமை இல்லையென்ற
  நடைகெட்டப் பேர்கள்
போட்டவித்தை பொடியட்டு
  போவதற்கே முழங்கு!
ஆட்டுவித்தால் ஆடுதற்கு
  ஆளில்லை என்றே
கேட்டுக் குணத்தாரைக்
  கொன்றொழிக்க முழங்கு

# கூடை சுமந்த காரிகை

**- செ. அ. எலியாசன் -**

கூடை யெடுத்தவள் போகையிலே – மெல்
ஆடை திருத்தியே ஏகையிலே
    கூடிக் களித்திட மனந்துடிக்கும் – கவி
    பாடிக் களித்திட சுவைபடைக்கும்!

★

முல்லைச் சிரிப்பினை வீசுகையில் – தேன்
சொல்லை விரித்தவள் பேசுகையில்
    ஏண்டி எனக்கொரு முத்தமென்பேன் – மெய்
    நீண்டி சுவைதரச் சித்தமென்பாள்!

★

மஞ்சள் முகவெழில் பெய்கையிலே – வளைக்
கொஞ்சுங் கரந்தளிர் கொய்கையிலே
    உள்ளம் நினைந்துனை வேகுதடி – நெஞ்சம்
    அள்ளி அணைத்திடத் தாவுதடி!

★

கண்ணைக் கயலெனக் காட்டுகையில் –வேட்கை
விண்ணைத் தழுவிட ஊட்டுகையில்
    நெஞ்சில் கவிமலர் பிறந்திருக்கும் – என்
    நெஞ்சம் உனக்கெனத் திறந்திருக்கும்!

(3-1-88 சிந்தாமணியில் வெளிவந்தது)

---

# நீலிக் கண்ணீர்...

கூலிக்கு உழைக்கிற ஏழை – அதிகார
வேலிக்குள் அவனென்றும் கோழை!
வேலுக்கு நிகரொத்தத் துன்பம் – அதிகாரக்
கோலுக்கு அவனடிமை என்றும்!
போலிக்குத் தலைவரென்று இருப்பார் – காசெண்ணி
நீலிக்கண் ணீரங்கு வடிப்பார்!
தோலிருக்கச் சுளைவிழுங்கப் பார்ப்பார் – அன்னவரோ
ஆளிருக்க உயிர்குடித்து ஆர்ப்பார்.

**-செ. எலியாசன்-**

(27-3-1988 வீரகேசரியில் வெளிவந்தது)

# குன்றுகளில்

குன்றுகளில் ஏறிவரும்
குன்ற மகள்தான் – எழில்
கொஞ்சிவரும் அத்தைமகள்
வஞ்சிக் கொடிதான்!
குன்றுலவு மஞ்சிமுகில்
நன்றே நிகர்க்கும் – குழல்
முடிவார கொசுங்காணி
ஆடை மறைக்கும்!
தென்றலெனும் மங்கையிவள்
சென்றே ஒடிக்கும் – தளிர்
கோடுகளில் கோதிவர
கூடை நிறைக்கும்!
வென்றவிழி வேல்விழியோ
சென்றே தைக்கும் – நெஞ்சைத்
தொட்டுவர கவிதைமலர்
மொட்டுச் சிரிக்கும்.

— தினகரன் —

# படைப்பாளியின் இதயத்திலிருந்து

ஒருநாட் பொழுதில் புனைந்த ஓவியம் இது. மலையொழுக புனலருவி தனில் மூழ்கும், இன்ப நிலையே இதனைப் புனையும் போது எனக்கேற்பட்டது அனுபவம்! இத்தகைய அனுபவம் பிறர்க்கும் வாய்ந்திட வேண்டும் என்பதே என் அவா. என்னிலும் நல்லனுபவம் வாய்ந்தோர் இதனிலும் பெரிதெனச் செய்தால் மலையகம் அழகில் பூக்கும்!

மலையகத்திற்கு அணியெனச் செய்யும் சிறுசிறு பணிகளே இவைகள்!

இத்தகையத் தொண்டில் மிக்கார்வமுள்ள—இனியன் – நல்லத் தூய பணியினன் – எழுச்சியும் வேட்கையுமுள்ளவன் – திரு. அந்தனி ஜீவா – அவரது தொண்டு வாழ்க!

வீணர் சேவையே பூணும் பாவியாய் இருப்பதை விட, இத்தகைய தொண்டு செய்வது கோடி நன்மை தரும்! எனது இந்தச் சிறு குறுங்காவியத்திற்கு அவர் காட்டிய ஆர்வம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. அன்னார்க்கு என் நன்றி!

என்னை முன்பின் அறியாத ஆசிரியப் பெருந்-தகை தேவதாசன் ஜெயசிங் என் கவிதையைப் பயின்று நல்லதொரு சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார். அவரது நாடி நலன்புரியும் அன்புத் தொண்டிற்கு நான் என்றும் கடமைபட்டுள்ளேன்.

மலையகத்தில் நல்லிலக்கியம் பூத்திடல் வேண்டும் என்றச் சிறப்பார்வமிக்க திரு. சாரல் நாடன் அணிந்துரை வழங்கி ஓவியத்தைச் சிறப்பித்தமைக்கு என் நன்றி!

ஓவியத்திற்கு ஓவியம் புனைந்த மலையகத்தின் இளம் பயிர் திரு. அற்புதராஜ் அவர்களை மலையகம் என்றும் நினைவுகொள்ளும் — "ஓவியத்தை" எவ்வாறுயினும் வெளிக் கொணர வேண்டும் என்ற அவாவுடன் ஓய்விலாது உழைத்த எனது அருஞ் செல்வன் ரெஜி ஜோசப் — என்றும் உடனிருந்து ஊக்குவித்த திரு. எஸ். விஸ்வலிங்கத்திற்கும் நன்றி பாராட்ட கடமைப் பட்டுள்ளேன்!

பொருள் உதவி புரிந்த எனது இனியக் குழந்தை -கள் ஜொனி பாக்கியம், எனு, ஜெசிந்தா, இராணி - ஆகியோர்க்கும் என் வாழ்த்துக்கள்!

சி. எ. எலியாசன்


வடக்கு பூண்டுலோயா,
பூண்டுலோயா.
01-09-88

---

அவசரத்தில் அச்சிட்டதால் எங்ஙனையும் அறியாமல் நேர்ந்த எழுத்து பிழைகளுக்காக வருந்துகிறோம்.

— அச்சகத்தார்.

மலையக மக்களின்
உரிமைக்காக
குரல் கொடுத்த
போராளியின் வரலாறு!



சாரல் நாடன்

எழுதிய

# தேசபக்தன்
# கோ. நடேசய்யர்

விலை ரூபாய் 75/-

விபரங்கட்கு:-

மலையக வெளியீட்டகம்
57, மகிந்த பிளேஸ்,
கொழும்பு-6

## மலையக வெளியீட்டகத்தின் வெளியீடுகள்:-

| | | |
|---|---|---|
| ★ சி. வி. சில சிந்தனைகள்<br>—சாரல் நாடன் | .... | 17—50 |
| ★ தியாக யந்திரங்கள்<br>—சு. முரளிதரன் | .... | 11—00 |
| ★ குறிஞ்சி தென்னவன் கவிதைகள்<br>—குறிஞ்சி தென்னவன் | .... | 12—00 |
| ★ யௌவம்<br>—தேவதாசன் ஜெயசிங் | .... | 25-00 |
| ★ கூடைக்குள் தேசம்<br>—சு. முரளிதரன் | .... | 10—00 |
| ★ தேசபக்தன் கோ. நடேசய்யர்<br>—சாரல் நாடன் | .... | 75—00 |

## அடுத்த வெளியீடு!

மாத்தளை வடிவேலன்

எழுதிய

## உரிமை வேண்டுமா?

(சிறுகதைத் தொகுதி)

---

தேயிலைக்கு பசுமையையும், தேநீருக்கு சாயத்தையும் தந்த மலையக மக்களைப் பற்றி எடுத்துச் சொல்லும் இலக்கிய சஞ்சிகை!

**கொழுந்து**

இது ஒரு மலையக வெளியீட்டக வெளியீடு!



இலக்கிய உலகில் எவ்வித சலசலப்புமின்றி அமைதியாகத் தன் எழுத்துப்பணியை தொடர்ந்து வருபவர் பூண்டுலோயாவைச் சேர்ந்த கவிஞர் சி. எ. எலியாசன். இவரின் ஆற்றலுக்கு எடுத்துகாட்டு, இவர் ஒரே நாளில் எழுதிய 'ஓவியம்'' என்ற குறுங்காவியம்.

அறுபதுகளில் எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைத்த சி. எ. எலியாசனின் முதல் படைப்பு "வெற்றி மணி'' என்ற சஞ்சிகையில் தான் மலர்ந்தது. அதன் பிறகு சிறுகதை எழுதுவதில் ஆர்வம் காட்டியுள்ளார். ஆனுல் கவிதைக்கன்னி தான் இவரின் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டாள்.

பதினுறு வயதில் பாரதியும், பாரதி தாசனும், கம்பதாசனும், சுரதாவும் இவரின் இதயங்கவர்ந்த கவிஞர்கள். அந்த கவிமணிகளின் கவிதைகளில் எந்நேரமும் மூழ்கி விடுவார். அதன் தாக்கம் இவரை கவிதை எழுதத்தூண்டியது. இவரது கவிதைகள் தினகரன், 'சிந்தாமணி' இதழ்களில் மலர்ந்தன.

பூண்டுலோயாவில் தோட்ட உத்தியோகத்தராகப் பணிபுரியும் சி. எ. எலியாசன் மலையக மக்களின் துன்ப துயரங்களைத் தன் படைப்புகளில் வெளிப்படுத்த விரும்புகின்ருர்.

— ஜீவா

குறிஞ்சிக்குரல் (தினகரன்)

*27 ஜூலை 1988*